**21.02.2020**

## பத்திரிக்கை செய்தி

## 2019 - நவம்பர், டிசம்பர் மற்றும் 2020 ஜனவரி மாதங்களில் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 4205 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை வழித்தடத்திலும் மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி-டி.எம்.எஸ் வழியாக விமான நிலையம் வரையிலான வழித்தடத்திலும் மெட்ரோ இரயிலில் மாதந்தோறும் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர்.

கல்விப் பயணங்கள் மாதந்தோறும் மேற்கொள்ளப்பட்டு மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவ, மாணவியருக்கு விளக்கப்பட்டு வருகிறது. இதில் சென்னையில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் மட்டுமின்றி திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரும் மெட்ரோ இரயில் கல்வி பயணத்தில் அழைத்து செல்லப்படுகின்றனர்.

கடந்த 2018-19-ஆம் கல்வி ஆண்டில் மொத்தம் 31,178 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் பயணித்து பயன்பெற்றுள்ளனர்.

2019-20 ஆம் ஆண்டிற்கான கல்விப் பயணம் 2019, ஜூன் 4 முதல் தொடங்கியது. 2019 நவம்பர், டிசம்பர் மற்றும் 2020 ஜனவரி மாதங்களில் மொத்தம் 4,205 மாணவ, மாணவியர் இந்த கல்விப் பயணத்தை மேற்கொண்டனர்.

ஜூன் 2019 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 24,400 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் பயணித்து மகிழ்ந்துள்ளார்கள்.

பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.